# யா/ஊரெழு கணேச வித்தியாசாலை

# வருடாந்த பரிசளிப்பு விழா

# 2017

**காலம் :** 21.11.2017 (செவ்வாய்க்கிழமை)

**நேரம் :** மு.ப 9.00 மணி

**இடம் :** பாடசாலை பிரதான மண்டபம்

*தலைமை*

**திரு.அன்ரன் பிறேமதாஸ்** அவர்கள்

(வித்தியாலய முதல்வர்)

*முதன்மை விருந்தினர்*

**திரு.க.செவ்வேள் அவர்கள்**

(அமைப்பாளர், யாழ் மாவட்டம், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி)

*சிறப்பு விருந்தினர்*

**திரு.நா.சிவனேசன் அவர்கள்**

(கோட்டக்கல்விப் பணிப்பாளர், கோப்பாய்)

*கௌரவ விருந்தினர்*

**திரு.M.R.ஜெயந்தரன் அவர்கள்**

(கிராம அலுவலர், ஊரெழு J/267)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– பாடசாலைச் சமூகம் –

# அதிபர் அறிக்கை – 2017

எல்லாம் வல்ல ஊரெழு வீரகத்தி விநாயகரின் தாள் பணிந்து வணங்கி இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் திரு. க. செவ்வேள் அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. நா. சிவநேசன் அவர்களே, கௌரவ விருந்தினராக வருகை தந்திருக்கும் ஊரெழு மேற்கு கிராம சேவையாளர் திரு. M. R . ஜெயாதரன் அவர்களே, அயற் பாடசாலை அதிபர்களே, பழைய மாணவர்களே, பெற்றோர்களே, நலன் விரும்பிகளே, எமது பாடசாலையின் ஆசிரியப் பெருந்தகைகளே, கல்வி சாரா ஊழியர்களே, மாணவச் செல்வங்களே உங்கள் அனைவருக்கும் அன்பார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு உங்கள் அனைவரையும் வருக வருகவென வரவேற்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றைய பரிசில் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பெரு மதிப்புக்குரிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் திரு க. செவ்வேள் அவர்கள் ஊரெழு மண்ணைச் சேர்ந்தவர். இவர் ஆரம்பக் கல்வியை எமது பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை யாழ் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்திலும் உயர் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியிலும் பயின்றவர். பொறியியலாளராகவும் சட்டத்தரணியாகவும் தம்மை உயர்த்திக் கொண்டவர். இவர் இப் பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்து வருகின்றார். குறிப்பாக இந்த வருடம் எமது மாணவர்களை நாடளாவிய கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துச் சென்று மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் பாராட்டைப் பெற்றவர். மேலும் பல கல்விச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வாஞ்சையோடு காத்திருப்பவர். இவர் இப்பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்வதையிட்டு பாடசாலைச் சமூகம் பெருமையடைகின்றது.

அடுத்து இன்றைய விழாவின் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் திரு நா . சிவநேசன் அவர்கள் தமது ஆரம்ப இடை நிலைக் கல்வியைா; கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கலைமாணிப் பட்டப் படிப்பை யாழ் பல்கலைக்கழகத்திலும் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை தேசிய கல்வி நிறுவகத்திலும் முதுகல்விமாணிப் பட்டத்தை யாழ் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக் கொண்டார். இவர் 25.03.1990 தொடக்கம் தனது ஆசிரிய சேவையை ஆரம்பித்து வலிகாம வலயத்தின் பல பாடசாலைகளில் தனது சேவையைத் திறம்பட ஆற்றி 01.01.1998 தொடக்கம் அதிபர் சேவைக்கு உயர்வு பெற்றார். இறுதியாக 02.07.2015 தொடக்கம் யாழ் கல்வி வலயத்தின் கோண்டாவில் இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி 08.06.2016 தொடக்கம் எமது கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்று இக் கோட்டத்தின் வளர்ச்சிக்காக அயராது சேவையாற்றி வருகின்றார். இவரையும் இந்த வேளையிலே வருக வருகவென வரவேற்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

அடுத்ததாக இன்றைய விழாவின் கௌரவ விருந்தினராக வருகை தந்திருக்கும் ஊரெழு மேற்கு கிராம சேவையாளர் திரு. M. R. ஜெயாதரன் அவர்கள் எமது பாடசாலையின் வளர்ச்சி மீது அக்கறை கொண்டவர். ஒழுங்கீனமான வரவுள்ள மாணவர்களின் வரவை மேம்படுத்துவதற்குப் பல வழிகளிலும் முயன்று வருபவர். அவரையும் இந்நேரத்தில் வருக வருகவென வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

## அறிமுகம்

ஊரெழு கிராமத்தின் மத்தியில் பலாலி வீதியின் அருகே வீற்றிருந்து வரமளிக்கும் வீரகத்தி விநாயகரின் திருநாமத்தைக் கொண்ட எமது பாடசாலை அன்பு, அறிவு, ஆரோக்கியம் என்ற மகுட வாசகத்தைத் தன்னகத்தே கொண்டு இக்கிராம மக்களின் கல்வி வளர்ச்சிக்காக (1931-2017) 86 வருடங்களாக சேவையாற்றி வருகின்றது.

## ஆசிரியர் குழாம்

எமது பாடசாலையில் தற்போதைய நிரந்தர ஆசிரியர்களின் எண்ணிக்கை 19 ஆகும். அவர்களுடன் வாரத்தில் 3 நாட்கள் ஆசிரியராகக் கடமையாற்றும் ஒருவரும் வாரத்தில் 2 நாட்கள் கடமை புரியும் இரண்டு ஆசிரியர்களும் ஒருங்கிணைந்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகத் தங்கள் சேவையைத் திறம்பட ஆற்றி பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருகின்றனர். இவர்களது அர்ப்பணிப்பான சேவையை உளமாரப் பாராட்டுவதுடன் இவ் வளத்தினை வழங்கிய யாழ் வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

அதிபர் -
22 ஆசிரியர் - 227 மாணவர்கள்.
O/L 36 பேரில் - 15 பேர் Pass 41.67 [illegible]
A/L 5 - 24 மாணவரில் 15 ) 4 [illegible]
[illegible] 3 பேர் - 100 - 4 மாணவர்
70 9 [illegible]
[illegible]
[illegible] - 5 [illegible] 2 [illegible]
1300 [illegible]

| இல | பெயர் | தரம் | தகைமைகள் |
|---|---|---|---|
| 1 | திரு ஞா. அன்ரன் பிறேமதாஸ் | SLPS 2 | B.A,M.A,PGDE,Pri.Trd |
| 2 | செல்வி அ. நடராசா | SLTS 1 | Sci. Trd |
| 3 | திரு சே. செல்வராசா | SLTS 1 | BA,Dip.in.Edu,Sci. Trd |
| 4 | திரு இ. கிருபாகரன்; | SLTS 3 1 | Nat.Dip.in.Edu(Hin) |
| 5 | திருமதி ம. உமாசுதசர்மா | SLTS 3 1 | BA,Dip.in.Edu |
| 6 | திருமதி த. சிவசோதிநாதன் | SLTS 1 | Pri.Trd |
| 7 | திருமதி சோ. அன்ரனி ஞானராஜ் | SLTS 2 2 | Nat.Dip.in.Edu(Maths) |
| 8 | திருமதி ஷ. பிரகாஷ் | SLTS 2 2 | BA,Dip.in.Edu |
| 9 | திருமதி ய. செல்வக்குமரன் | SLTS 1 | Dance Trd |
| 10 | திரு ஆ. மோகனகாந் | SLTS 2 2 | B.Ed,Nat.Dip.in.Teach(ICT) |
| 11 | திரு இ. சாரங்கன் | SLTS 2 1 | B.Ed,Tamil Trd(spl) |
| 12 | திருமதி ட . கேதீசன் | SLTS 2 2 | B.Ed,Pri.Trd |
| 13 | செல்வி மா. குணநாயகி | SLTS 2 1 | BFA,Dip in Music |
| 14 | திருமதி ந. செல்வக்குமார் | SLTS 2 2 | B.com,Com Trd |
| 15 | திருமதி க. மோகனகாந் | SLTS 3 1 | Nat.Dip.in.Teach(Eng) |
| 16 | திருமதி ற. ஸ்ரீதரன் | SLTS 3 1 | B.Ed,Nat.Dip.in.Teach(Hin) |
| 17 | திருமதி அ. கணேசன் | SLTS 2 2 | Pri.Trd |
| 18 | செல்வி இ. தம்பிமுத்து | SLTS 1 | M.Ed,B.A(Hons),Dip.in.Edu, Spl Trd(English) |
| 19 | திருமதி அ. ஜெனன் கனியூட் | SLTS 3 1 | Nat.Dip.in.Teach(Home Sc) |
| 20 | செல்வி நி. யோகேந்திரன் | SLTS 3 1 | B.Sc(Agri) |
| 21 | திரு வை. சங்கர்ராஜ் | SLTS 2 1 | Art.Trd |
| 22 | திரு சு . இந்திரதாஸ் | SLTS 2 2 | Physical Edu |

## மாணவர்கள்

எமது பாடசாலையின் மாணவர் விபரம் வருமாறு:-

| தரம் | எண்ணிக்கை |
|---|---|
| 1-5 | 71 |
| 6-11 | 156 |
| மொத்தம் | 227 |

## கல்விசாரா ஊழியர்கள்

எமது பாடசாலையின் நாளாந்த செயற்பாடுகளுக்கு உதவி வரும் அலுவலக ஊழியர் திரு. ச. சபேசராசன் அவர்களுக்கும் இரவுக் காவலாளியாகக் கடமையாற்றும் திரு. இ . சந்திரமோகன் அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

## இடமாற்றம்

எமது பாடசாலையில் உடற்கல்வி ஆசிரியராகக் கடமையாற்றிய செல்வி ப. டொமினிக் நிரந்தர இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். இவர் எமது பாடசாலையில் இருந்த காலத்தில் மாணவர்களை உடற்கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட உதவி புரிந்துள்ளார். அதேபோன்று திருமதி த. கணேசலிங்கம் அவர்கள் தொடக்கம் நிரந்தர இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். இவர் 04.07.2015 தொடக்கம் 03.04.2016 வரை பதில் அதிபராகச் செயலாற்றிப் பாடசாலையைப் பலவழிகளிலும் மேன்மையடையச் செய்துள்ளார். இவர்கள் தாங்கள் பணியாற்றும் இடங்களிலும் சிறப்பாகச் சேவையாற்ற வாழ்த்துகின்றேன்.

## நிர்வாகம்

எமது நிர்வாகச் செயற்பாடுகளுக்கு உதவியாக உப அதிபர் செல்வி. அ . நடராஜா அவர்களும் பகுதித் தலைவர் திரு. செ . செல்வராஜா அவர்களும் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொருளாளராக இருந்து அலுவலகக் கணக்குப் பதிவேடுகளைத் திறம்படப் பேணிவரும் திருமதி. ந. செல்வகுமார் ஆகியோருடன் முகாமைத்துவக்குழு, ஒழுக்காற்றுக்குழு மற்றும் குழுக்களும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். இவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## கல்விப் பெறுபேறுகள்

கடந்த வருடம் (2016) க.பொ.த (சா /தர)ப் பரீட்சைக்குத் தோற்றிய 36 மாணவர்களில் 15 மாணவர்கள் (41.6 %) சித்தி பெற்று க.பொ.த (உ/தர)த்துக்குத் தகுதி பெற்றுச் சென்றதுடன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 24 மாணவர்களில் இ. நிலாஜினி என்ற மாணவி 151 புள்ளிகள் பெற்றதுடன் 3 பேர் 100 புள்ளிகளுக்கு மேலும் 4 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேலும் பெற்றுள்ளார்கள். இவர்களுக்கும் இவர்களை வழிப்படுத்திய திருமதி. ட . கேதீசன் ஆசிரியை அவர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

## இணைப்பாடவிதான செயற்பாடுகள்

மனைப் பொருளியல் போட்டியில் எமது பாடசாலை மாணவி கு. கம்சிகா மாகாண மட்டம் வரை கலந்து கொண்டமை சிறப்பான விடயமாகும். இவரை வழிப்படுத்திய ஆசிரியை திருமதி .சு . ஜெனன் கனியூட் அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

## புதிய கட்டடம்

எமது பாடசாலைக்குத் தேவையாகவிருந்த மலசல கூடத்துக்கான கட்டுமாணப் பணிகள் உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் நடைபெற்று வருகின்றது. இதன் வேலைகள் இம்மாத இறுதிப்பகுதிக்குள் நிறைவடைந்து மாணவர் பயன்பாட்டுக்கு விடப்பட இருக்கின்றது. இதனை எமக்கு வழங்கிய வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் இந்த வேளையில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## நூலகம்

ஆசிரியர் மாணவர்களின் அறிவுத் தேடலுக்குத் துணை புரியம் அரும்பெரும் பொக்கிஷமாக நூலகம் விளங்குகின்றது. இது ஓரளவு வசதிகளுடன் சிறப்பாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இங்கு சுமார் 1300 புத்தகங்கள் நூலகத்தை உயிர்ப்பூட்டுகின்றன. மேலும் கலைக்களஞ்சியம் வார இதழ் தினசரிப்பத்திரிகைகள் என்பனவும் பயன்பாட்டில் உள்ளன. மாணவர்களுக்குப் புத்தகங்கள் இரவல் கொடுக்கும் முறை தொடர்ந்தும் பேணப்பட்டு வருகின்றது. இதற்கு செல்வி இ .தம்பிமுத்து ஆசிரியர் பொறுப்பாக இருந்து சிறப்பாக நடாத்தி வருகிறார். இவருக்கும் எனது நன்றிகள்.

## கணனி

இன்றைய உலகில் ஆங்கிலமும் கணனியும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளது. அவ்வகையில் எமது பாடசாலையில் கணனிப் பற்றாக்குறை உள்ள போதிலும் 5 கணனிகளை வைத்து மாணவர்களின் தேவைகள் கற்றல் செயற்பாடுகளைச் செய்து வந்தோம். தற்போது 2 கணனி மட்டுமே தொழிற்படக்கூடிய நிலையில் உள்ளது. கணனிப் பிரிவுக்குப் பொறுப்பாசிரியராக

திரு ஆ . மோகனகாந் ஆசிரியர் அவர்கள் பணியாற்றி வருகின்றார். இவருக்கும் எனது நன்றிகள்.

## இணையம்

எமது பாடசாலைக்கென வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் இணையத்தளம் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது. அதன் முகவரி www.ureluganesha.sch.lk ஆகும். இதில் எமது பாடசாலையின் விபரங்கள், நிகழ்வுகளை யாவரும் அறிந்து கொள்ளலாம். எமது பாடசாலை பற்றிய சகல விபரங்களையும் இணையத்தளத்தினுடாகப் பார்வையிடலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். எமது மின்னஞ்சல் முகவரி u.ganeshavid@gmail.com என்பதாகும்.

## மாணவர் தலைவர்கள்

பாடசாலையின் ஒழுங்கைப் பேணுவதற்கு 25 மாணவத் தலைவர்கள் .பாடசாலை ஆளணியினருடன் இணைந்து ஏனைய மாணவர்களுக்கு முன்மாதிரியாகச் செயற்படுவது பாடசாலையின் நற்பெயருக்குத் துணையாக உள்ளன. சிரேஷ்ட மாணவத் தலைவனாக செல்வன். ம. பத்மவிதுஷன் உதவி சிரேஷ்ட மாணவத் தலைவியாக செல்வி ர . அஜந்தா ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர். இதற்கு ஒழுக்காற்றுச் சபைப் பொறுப்பாசிரியர்களாக திரு இ. கிருபாகரன், திருமதி சோ. அன்பனி ஞானராஜ், திருமதி த. சிவசோதிநாதன், திரு ஆ. மோரினகாந், திரு இ. சாரங்கன், திருமதி ச. பிரகாஷ் ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர். இவர்களுக்கும் எனது நன்றிகள்.

## மாணவர் பாராளுமன்றம்

இந்த வருடம் எமது பாடசாலையில் முதன்முதலாக மாணவர் பாராளுமன்றம் உருவாக்கப்பட்டது. ஜனநாயகப் பண்புகளை அறிந்து கொள்வதற்கும் மாணவர்களிடையே தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கும் இது பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இதன் பொறுப்பாசிரியர்களாக திரு. இ. சாரங்கன் மற்றும் திருமதி. '. பிரகாஸ் அவர்களும் இருந்து வழிநடாத்தி வருகின்றனர். இவர்களுக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகுக.

## உலக உணவுத் திட்டம்

போஷாக்கான உடலில் தான் நல்ல சிந்தனை இருக்கும் என்ற அறிஞர்களின் கருத்துக்களை மனதிற் கொண்டு மாணவர்களின் சிந்தனைத் திறன் விரிவடையவும் கற்றல் செயற்பாடுகள் மென்மேலும் வலுப்பெறவும் உணவானது பிரதானமாகிறது. அந்த வகையில் உணவு வழங்கும் செயற்றிட்டத்தை (WFP) உலக உணவுத் திட்டம் மேற்கொண்டு வருகின்றது. அவர்களுக்கும் இதற்குப் பொறுப்பாக செயற்பட்டு வருகின்ற திரு சே. செல்வராஜா ஆசிரியர் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

## ஆசிரியர் கழகம்

எமது பாடசாலையில் ஆசிரியத்துவப் பண்பினை மென்மேலும் வளர்க்கும் முகமாக ஆசிரியர் கழகமானது சிறப்பாகச் செயற்படுகின்றது. ஆசிரியர்களின் சுக துக்க நிகழ்வுகளில் கலந்து கொள்ளல், வருடாந்த தேநீர் விருந்துபசாரம், மதிய போசனம் என்பவற்றுடன் இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள், ஓய்வு பெறும் ஆசிரியர்கள் ஆகியோரைக் கௌரவித்தல் என்பனவும் இதன் பணிகளாகும். இதன் செயலாளராக திரு இ. கிருபாகரன், பொருளாளராக திரு ஆ. மோகனகாந் ஆகியோர் கழகத்தை நல்லமுறையில் வழிநடாத்துகின்றனர். இவர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

## பாடசாலை அபிவிருத்திக் குழு (SDC)

இன்று பாடசாலையின் சகல செயற்பாடுகளுக்கும் பொறுப்பாக இருக்கும் குழு இதுவாகும். பதவி வழித்தலைவராக அதிபர் இருப்பார். பாடசாலை அபிவிருத்திக் குழுவானது அதிபர் ஆசிரியர்கள் பெற்றோர்கள் பழையமாணவர் சங்கப் பிரதிநிதிகள் வலயப் பிரதிநிதி ஆகியோரைக் கொண்டு செயற்பட்டு வரும் ஓர் அமைப்பாகும். செயலாளராக திருமதி தளாயினி மதனராசா அவர்களும் பொருளாளராக பாடசாலையின் ஆசிரியர் திருமதி ந. செல்வகுமார் அவர்களும் செயற்பட்டு வருகின்றனர். இக்குழுவானது பாடசாலை மேம்பாட்டுத் திட்டங்களுக்குப் பெரிதும் உறுதுணையாகச் செயற்பட்டு வருகின்றது. இவர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

## பழைய மாணவர் சங்கம்

பாடசாலையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றக்கூடியவர்கள் பழைய மாணவர்களே. "இது எமது பாடசாலை" என்ற உணர்வு இவர்களுக்கே அதிகம் உண்டு. பாடசாலையின் தேவைகள், பாடசாலையின் நிகழ்வுகளில் தம்மை முற்றாக அர்ப்பணிக்கும் ஆற்றலும் விருப்பமும் அதிகம் உண்டு. இச்சங்கம் சிறப்பாக செயற்பட்டு வருகின்றமை பெருமைக்குரியதாகும். இச்சங்கத்தின் தலைவராக திரு மு. ஆனந்தராஜா அவர்களும் செயலாளராக செல்வி கி. சுதர்சினியும் செயற்பட்டு வருகின்றனர். இவர்களது தன்னலமற்ற சேவைக்கு எனது நன்றிகள்.

## பாடசாலைக்கான நன்கொடைகள்

ஊரெழு பழைய மாணவரும் லண்டனில் வசிப்பவருமான திரு பரமசிவம் அவர்களால் 5 மாணவர்களுக்கு கற்றல் முன்னேற்ற செயற்பாட்டை மேற்கொள்வதற்கு மாதாந்தம் 500 ரூபா பெறுமதியான வவுச்சரை 12 மாதங்களுக்கும் பயன்படுத்தக்கூடியதாக வழங்கியுள்ளார். இவரது தன்னலமற்ற சேவைக்கு எனது நன்றிகள்.

**அ**கில இலங்கை இந்து மாமன்றத்தினரால் வறிய மாணவர்கள் 10 பேருக்கு ஒரு தவணைக்கு 3000 வீதம் வழங்கப்படுகின்றது. இது மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை ஊக்குவிக்கக் கூடியதாக அமைந்துள்ளது. இவ்வுதவியை வழங்கும் அகில இலங்கை இந்து மாமன்றத்தினருக்குப் பாடசாலைச் சமூகம் சார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பரிசில் நிதியம்

மாணவர்களின் ஆற்றல்களை வளர்த்து அதன் மூலம் அவர்களுக்கும் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் நன்மையளிக்கும் நோக்கோடு 2007 ஆம் ஆண்டு பழைய மாணவர் சங்கத்தின் உதவியுடன் பரிசில் நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிதியத்தில் ரூபா 30,000 நிலையான வைப்பாகவுள்ளது. இந்நிதியுடன் திரு பஞ்சலிங்கம் பராமநாதன் (வஞ்சி) என்பவரின் ஞாபகார்த்தமாக இப்பாடசாலைக்கு " வஞ்சி ஞாபகார்த்த நிதியம்" என்ற திட்டத்தின் கீழ் அவரது குடும்பத்தினரால் வருடாந்தம் ரூபா 25,000 வழங்கப்பட்டு வருகின்றது. இந்நிதியத்தினால் கல்வி, விளையாட்டு, இணைப்பாடவிதானம் என்பவற்றில் சிறந்து விளங்கிய 7 மாணவர்களுக்குப் பரிசில் வழங்கப்படுகின்றது. இந்நிதியம் ஒவ்வொரு வருடமும்

நடைமுறைப்படுத்தப்படும். இந்நிதியை வழங்கும் அவரது குடும்பத்தினருக்கு பாடசாலைச் சமூகம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## தேவைகள்

1. பாடசாலையில் 13 வகுப்புக்கள் நடைபெறுகின்ற போதிலும் 8 வகுப்புக்கள் மட்டுமே உரிய வகுப்பறையில் நடைபெறுகின்றன. ஏனையவை அரை நிரந்தரக் கட்டடத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே மாணவர்களின் அடிப்படைக் கற்றலுக்காக 5 வகுப்பறைகள் 110□ × 25□ கொண்ட கட்டடமொன்று அவசியமாகத் தேவைப்படுகின்றது.

2. மாணவர்களின் குடிநீர்த் தேவைக்கு, விவசாயப் பயிர்செய்கைக்கு நீர் பற்றாக்குறையாக உள்ளது. எனவே இத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக புதிய நீர்த்தாங்கி அமைக்கப்பட வேண்டும்.

3. எமது பாடசாலையில் மாணவர்களின் கற்றலுக்கு 2 கணனிகள் மட்டுமே தற்போது உள்ளன. மாணவர்களின் முழுமையான கற்றல் செயற்பாடுகளுக்கு மேலும் 15 கணனிகள் தேவையாக உள்ளன.

4. எமது பாடசாலையில் வடக்குப் பக்கத்திற்கான வேலிக்குரிய மதில் கட்டப்பட வேண்டும்.

5. சங்கீத நடனப் பாடங்களுக்கான வகுப்பறைகள் மூடி அமைக்கப்பட வேண்டும்.

6. கணனி அறைக்கான நிலம் சீரமைக்கப்பட வேண்டிய நிலையிலுள்ளது.

7.மனைப்பொருளியல் பாடத்திற்குப் பொருத்தமான வகுப்பறை தேவையாக உள்ளது.

8. 30□ × 20□ கொண்ட அதிபர் அலுவலகம் தேவையாக உள்ளது.

9. பாடசாலை மைதானம் சீரமைக்கப்பட வேண்டியுள்ளது.

## நன்றிகள்

இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு மதிப்பளித்து எமது அன்பான வேண்டுகோளை ஏற்று மிகுந்த வேலைச் சுமைகளுக்கு மத்தியில் எமக்காக நேரத்தை ஒதுக்கி விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பிரதம விருந்தினர்,

சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர் ஆகியோருக்கும் பாடசாலைச் சமூகத்தின் சார்பாக நன்றிகள். மேலும் இவ்விழாவிற்கு நிதியுதவி வழங்கிய அன்பர்களுக்கும் அன்பளிப்புக்கள் வழங்கிய பெரியோருக்கும் மற்றும் பற்பல உதவிகள் புரிந்த அன்பர்களுக்கும் நன்றிகள்.

மேலும் எமது அழைப்பை ஏற்று இன்றைய விழாவிற்கு வருகை தந்த அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் இவ்விழாவை சிறப்புற நடாத்துவதற்கு உதவிய ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், பாடசாலை அபிவிருத்திக்குழு மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

## பரிசில் பெறுவோர் விபரம் - 2017

### தரம் - 01 மாணவர்கள் ( 2017 )

1. ந.நிசாந்
2. சு.கஜீதரன்
3. சி.விதுர்சன்
4. ம.திலக்சன்
5. சு.சுகிர்தன்
6. ர.சயந்தன்
7. பி.தபிர்ணா
8. கு.திசானா

### தரம் - 01

1. சோ.ஜிந்துசன் - தமிழ், கணிதம் -1ம் இடம்
   சுற்றாடல் - 2ம் இடம் , சமயம் - 3ம் இடம்
2. சி.திலக்சினி - சுற்றாடல், சமயம் - 1ம் இடம்
   தமிழ், கணிதம் - 2ம் இடம்
3. ச.சஸ்மிகா - சமயம் - 2ம் இடம் , தமிழ் 3ம் இடம்
4. ச.சணியா - கணிதம் - 3ம் இடம்
5. சு.பிரதாப் - சுற்றாடல் - 3ம் இடம்

### தரம் - 02

1. பி.கம்சிதரன் - தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல் - 1ம் இடம்
2. சு. கேனுஜா - தமிழ், சமயம், கணிதம் - 2ம் இடம்
   சுற்றாடல் - 3ம் இடம்
3. க.கம்சி - தமிழ், சமயம், கணிதம் - 3ம் இடம்
   சுற்றாடல் 2ம் இடம்
4. பி.டினுஸ்ரா - கணிதம் - 3ம் இடம்

### தரம் - 03

1. சி.கரணிகா - தமிழ், கணிதம், ஆங்கிலம் - 1ம் இடம்
   சமயம், சுற்றாடல் - 2ம் இடம்
2. சு.சந்தணா - சுற்றாடல் - 1ம் இடம்
   தமிழ் - 2ம் இடம்
   கணிதம், ஆங்கிலம் - 3ம் இடம்
3. சி.மதுமிதா - தமிழ், சமயம் - 1ம் இடம்

கணிதம், ஆங்கிலம் - 2ம் இடம்

சுற்றாடல் - 3ம் இடம்

### தரம் - 04

1. இ.நிலாயினி - தமிழ், கணிதம், ஆங்கிலம், சமயம்,
   சுற்றாடல் - 1ம் இடம்
2. இ.சுகி - தமிழ், கணிதம், ஆங்கிலம், சமயம்,
   சுற்றாடல் - 2ம் இடம்
3. கி.ம.அபிசா - தமிழ், கணிதம், ஆங்கிலம், சமயம்,
   சுற்றாடல் - 3ம் இடம்

### தரம் - 05

1. சு.நிசானி - தமிழ், சமயம், சுற்றாடல் - 1ம் இடம்
   கணிதம், ஆங்கிலம் - 3ம் இடம்
2. சி.கயூறிகா - கணிதம் - 1ம் இடம்
   தமிழ், சுற்றாடல், ஆங்கிலம் - 2ம் இடம்
   சமயம் - 3ம் இடம்
3. ச.கியான்சி - கணிதம் - 2ம் இடம்
   தமிழ், சமயம், சுற்றாடல் - 3ம் இடம்
4. வி.யதுசா - ஆங்கிலம் - 1ம் இடம்

### தரம் - 06

1. ச.சதாசினி - தமிழ், விஞ்ஞானம், நடனம் - 1ம் இடம்
   சமயம், கணிதம், வரலாறு, குடியுரிமை,
   செய்முறைதொழினுட்பம், சுகாதாரம் - 2ம் இடம்
   ஆங்கிலம், புவியியல் - 3ம் இடம்
2. ச.சேனுஜன் - சமயம், கணிதம், வரலாறு, குடியுரிமை,
   செய்முறை தொழினுட்பம், சுகாதாரம்
   புவியியல், சித்திரம் - 1ம் இடம்

ஆங்கிலம், விஞ்ஞானம் - 2ம் இடம்
தமிழ் - 3ம் இடம்

3. த.லபிதா - ஆங்கிலம், சங்கீதம் - 1ம் இடம்
தமிழ், புவியியல் - 2ம் இடம்
சமயம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, குடியுரிமை, செய்முறை தொழினுட்பம், சுகாதாரம் - 3ம் இடம்

## தரம் - 07

1. ந.மதுசியா - சமயம், தமிழ், சுகாதாரம், சங்கீதம் - 1ம் இடம்
கணிதம், செய்முறை - 2ம் இடம்
ஆங்கிலம், குடியுரிமை - 3ம் இடம்

2. அ.வைஸ்ணவி - கணிதம், செய்முறை, நடனம் - 1ம் இடம்
ஆங்கிலம், குடியுரிமை, வரலாறு - 2ம் இடம்
சமயம், தமிழ், புவியியல், சுகாதாரம் - 3ம் இடம்

4. சு.கீர்த்தனா - ஆங்கிலம் - 1ம் இடம்
சமயம், தமிழ், சுகாதாரம் - 2ம் இடம்
கணிதம், , வரலாறு செய்முறை - 3ம் இடம்

5. சே.கோகுலன் - விஞ்ஞானம் - 1ம் இடம்
6. ம.கனிஸ்ரன் - புவியியல் - 1ம் இடம் விஞ்ஞானம் - 2ம் இடம்
7. சு.சுயீராந் - புவியியல் சங்கீதம் - 2ம் இடம் விஞ்ஞா - 3ம் இடம்
8. சே.டினோஜ்குமார் - வரலாறு,குடியுரிமை - 1ம் இடம்
9. செ.கனிஸ்ரன் - சித்திரம் - 1ம் இடம்
10. ஜெ.கம்சனா - நடனம் - 1ம் இடம்

## தரம் - 08

1. சு.துசானி - விஞ்ஞானம், நடனம், சமயம், கணிதம், ஆங்கிலம், - 1ம் இடம்
செய்முறைதொழினுட்பம், தமிழ், - 2ம் இடம்
புவியியல் வரலாறு - 3ம் இடம்

2. சு.துசாளி - தமிழ், புவியியல்,சங்கீதம், செய்முறை - 1ம் இடம்
ஆங்கிலம், வரலாறு - 2ம் இடம்
சமயம், விஞ்ஞானம், - 3ம் இடம்

3. சி.கபாஸ்கர் - வரலாறு, குடியுரிமை 1ம் இடம்

சமயம், புவியியல் - 2ம் இடம்
செய்முறை 3ம் இடம்

4. ம.தனுஜா - குடியுரிமை – 1ம் இடம்
கணிதம் 2ம் இடம் தமிழ் 3ம் இடம்
5. ர.கஜிதா - விஞ்ஞானம் - 2ம் இடம்
குடியுரிமை ஆங்கிலம் - 3ம் இடம்
கோட்டமட்ட ஆங்கிலதினம் 2016உறுப்பெழுத்து 3ம் இடம்
6. மு.அரவிந் - சித்திரம் -1ம் இடம் கணிதம் - 3ம் இடம்

**தரம் - 09**

1. ஸ்ரீ.ஜானுசன் - தமிழ், ஆங்கிலம், சுகாதாரம் - 1ம் இடம்
சமயம், வரலாறு, விஞ்ஞானம், தொழினுட்பம் - 2ம் இடம்
புவியியல் - 3ம் இடம்
2. ஜெ.சாளினி - சமயம், சங்கீதம் - 1ம் இடம் ஆங்கிலம் - 3ம் இடம்
3. ர.துவரரகன் - விஞ்ஞானம் - 1ம் இடம் சுகாதாரம் - 2ம் இடம்
கணிதம் வரலாறு, குடியுரிமை - 3ம் இடம்
4. ம.அபர்ணா - வரலாறு, குடியியல் - 1ம் இடம்
தமிழ், ஆங்கிலம், புவியியல் - 2ம் இடம்
சுகாதாரம் - 3ம் இடம்
5. ஜெ.மதீபன் - புவியியல் - 1ம் இடம் கணிதம், குடியுரிமை -2ம் இடம்
சமயம், விஞ்ஞானம் - 3ம் இடம்
6. ஜெ.காயத்திரி - தொழினுட்பம் - 1ம் இடம்
7. செ.டிலக்சன் - சித்திரம் - 1ம் இடம்
8. ஜெ.டிலக்சினி - நடனம் - 1ம் இடம்
9. சி.நிதுஜா - தமிழ் - 3ம் இடம்
10. ச.சலைக்சன் - தொழினுட்பம் - 3ம் இடம்

**தரம் - 10**

1. தெ.நிசாந் - சமயம், விஞ்ஞானம் தமிழ், கணிதம் - 1ம் இடம்
வரலாறு, வர்த்தகம், சங்கீதம் - 2ம் இடம்
ஆங்கிலம் - 3ம் இடம்
2. வ.நிவேதா - ஆங்கிலம், த.தொழினுட்பம், புவியியல் - 1ம் இடம்
சமயம், தமிழ், கணிதம் - 2ம் இடம்
விஞ்ஞானம் வரலாறு, - 3ம் இடம்
3. கு.கம்சிகா - நடனம், மனையியல் - 1ம் இடம்
சமயம், தமிழ் - 3ம் இடம் மனைப்பொருளியல்
கோட்டமட்ட குறுவினாப்போட்டி – 1ம் இடம்
வலயம் - 3ம் இடம்
4. கோ.சாரங்கன் - ஆங்கிலம் - 2ம் இடம்
5. மு.கனிஸ்ரன் - கணிதம் - 3ம் இடம்

6. ம.விதுசன் - வரலாறு, சுகாதாரம் - 1ம் இடம்
விஞ்ஞானம் - 2ம் இடம்
7. பி.றம்சிகா - குடியுரிமை - 1ம் இடம்
8. ம.பத்மவிதுர்சன் - சித்திரம் - 1ம் இடம்
9. ச.சதீர்சன் - விவசாயம் - 1ம் இடம்

**தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சை 2017ல் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் விபரம்**

1. இ.நிலாயினி - 151
2. இ.சுகி - 147
3. ம.அதுசா - 123
4. சி.விபூசனா - 90
5. பி.பிறிம்சிகா - 76
6. சி.நிசான் - 73
7. ம.அபிசா - 72

**க.பொ.த (சா/த) 2016ல் சித்தி பெற்றோர் விபரம்**

1. மோ.சதுசன் - 2A , 3B ,4C
2. ஜெ.கம்சிகா - 3A , 3B ,3S
3. அ.விதுர்ஜன் - 2A , 3B ,2C, S
4. ர.அஜிதா - 2A , 3B ,1C, 3S
5. ர.லக்ஷிகன் - 6C, 2S
6. இ.கனிஸ்ரன் - 2B ,5C, 2S
7. நா.கோமளா - 2B ,2C, 3S
8. பு.சுஜான் - 2B ,2C, 2S
9. ர.லக்ஷிதா - 4C, 3S
10. ஜெ.சிலைக்ஷனா- 4C, 3S
11. க.பார்த்தீபன் - 3C, 4S
12. உ.பவிதா - B ,2C, 3S

**வஞ்சி ஞாபகார்த்த நினைவுப்பரிசு**

**ஊரெழு கிழக்கைச் சேர்ந்த அமரர் பஞ்சலிங்கம் பரமநாதன் நினைவாக திரு.சி.ஆதவன் குடும்பத்தினர் கனடா வழங்கிய பரிசு**

1. செல்வன் மோகனதாஸ் சதுசன் க.பொ.த(சா/த)2016 2A , 3B ,4C
2. செல்வி. கம்சிகா ஜோன்சன் மக்லின் க.பொ.த(சா/த)2016 3A , 3B ,3S
3. தரம் $08^{A}$ செல்வன் செல்வராசா கனிஸ்ரன் கோட்டமட்ட விளையாட்டுப்போட்டி நீளம் பாய்தல் 1ம் இடம்
4. செல்வி விதுசா சத்தியபகவான் கோட்டமட்ட விளையாட்டுப்போட்டி குண்டுஎறிதல் 1ம் இடம்
5. செல்வி நிலாயினி இன்பராசா தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை 2017ல் சிறந்த புள்ளியாக 151 புள்ளிகளை பெற்றமை.

## அன்பளிப்பு

1. திரு சி.ஆதவன் (வஞ்சி நிதியம்) - 25,000/-
2. திரு த.தர்மஜெயசூரியர் ( ஓய்வு நிலை வங்கி உத்தியோகத்தர்) - 10,000/-
3. திரு ஐ.மகேந்திரம் - 10,000/-
4. திரு பசுபதி இராசேந்திரம் ( சமாதான நீதவான்) - 5,000/-
5. திருமதி றமீலா ஸ்ரீதரன் (அமரர் ம.சீவரத்தினம் நினைவாக) - 5,000/-
6. செல்வி மா.குணநாயகி (ஆசிரியர்) - 5,000/-
7. பாபு வெதுப்பகம் - 1,300/- பெறுமதியான கேக்
8. சி.கரன் ஹாட்வெயர் - 1,000/-
9. புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் ரெலிகொம் - 1,000/-
10. திருமதி முத்துக்குமாரசாமி அமரர் முத்துக்குமாரசாமி ஞாபகார்த்தம் - 1,000/-
11. பிரதீபா ஞாபகார்த்தம் - திருமதி சி.மகேந்திரம் தரம் 01 மாணவருக்கான பரிசு
12. திருமதி றஞ்சினி கணேசதேவா (முன்னாள் ஆசிரியை ) - கற்றல் உபகரணம்

# பாடசாலைக் கீதம்

**இராகம்** : **பிருந்தாவனசாரங்கா**
**இயற்றியவர்** : **பிரம்மஸ்ரீ வீரமணிஐயர்**
**தாளம்** : **சதுஸ்ர ஏகம்**

**பல்லவி**

வாழிய வாழிய வாழியவே
கல்வி கலை தரும் ஊரெழு கணேச
வித்தியாசாலை வாழியவே

(வாழிய வாழிய
வாழியவே)

**சரணம்**

செல்வி கலைமகளும் சேர்ந்து வாழும்
ஊரெழு மேவும் அருள் மிகு திருக்கோயில்
வல்ல வீரகத்தி தெய்வம் வந்தருளும்
திருவாயில் அமைந்த எம் தாயாம் வித்தியாசாலை
வித்தியாசாலை வாழியவே

(வாழிய வாழிய
வாழியவே)

செந்தமிழ் ஆங்கிலம் செழுங்கலை விஞ்ஞானம்
முந்து கணிதம் விவசாயம் மனையியல்
பந்து விளையாடல் பாடல் பரதம்
சித்திரமும் தந்து சிறப்புடன் விளங்கும்
வித்தியாசாலை வாழியவே

(வாழிய வாழிய
வாழியவே)

அதிபர் ஆசிரியரை அனுதினம் பணிகுவோம்
மதித்தவர் கல்வி கலை மாண்புடன் பயிலுவோம்
அதிருபமாய் ஒழுக்கசீலராய் வாழுவோம்
ஆனந்த வாழ்வு தந்த அன்னையினைப் போற்றுவோம்
வித்தியாசாலை வாழியவே

(வாழிய வாழிய
வாழியவே)